முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 19/2023

2024–ம் வருடம் ஏப்ரல் மாதம் 25–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: கணேசன் (வா.சா.1) தொழில்: கூலி

த/பெ: கிருஷ்ணசாமி இனம்: ஆண்

கிராமம்: வயலூர் வயது: 57

மாவட்டம்: திண்டுக்கல் நாள்: 25–04–2024

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. 30.09.2020 தேதி நானும், பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட பதிவு கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1. 01.10.2022 தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2. அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3. அதற்கு 10.10.2022 தேதி பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4. 16.09.2010 தேதிய பிரதிவாதிக்கு அவரது தாயார் மற்றும் சகோதரி எழுதிக்கொடுத்த பதிவு பாகபாத்திய விடுதலைப் பத்திரம் அசல் வா.சா.ஆ.5. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: ஒத்திவைக்கப்படுகிறது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.04.25 17:13:26 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.